# சிவனின் கண்கள்
# ருத்திராக்ஷம்



நசிகேதன்

ஸ்ரீ மதுரகாளி பதிப்பகம்



## சிவ பக்தனான ஸ்ரீ நந்திகேஸ்வரன் ருத்திராக்ஷம் அணிந்திருப்பது பற்றிய குறிப்பு

### த்யானம்

*ரக்தம் த்ரிநேத்ரம் ஜடிலம் வராபய கராம் புஜம்|*
***அக்ஷமாலாம்** த்ரிசூலஞ்ச ததாநம் ஸவ்ய வாமயோ:||*
*பஸ்மோத் தூளித ஸர்வாங்கம் விபுத ஜனஸேவிதம்|*
*சிவா பரஸ்வரூபஞ்ச வந்தேஹம் நந்திகேஸ்வரம்||*

பொருள்: சிவந்த மேனி உடையவரும், முக்கண்கள் கொண்டவரும், நீண்ட ஜடையுடையவரும், கைகளில் வரதமுத்திரை அபயமுத்திரை காட்டி **ருத்திராக்ஷ ஜபமணிமாலை** மற்றும் திரிசூலம் கொண்டிருப்பவரும், உடல் முழுவதும் திருநீறணிந்திருப்பவரும், வித்வான்களால் வணங்கப்படுபவரும், சிவ "சாரூபம்" கொண்டு விளங்குபவரும் ஆன **ஸ்ரீ நந்திகேஸ்வரனே** உம்மை வணங்குகிறோம்.

**மூர்த்தி த்யானம்**
தஞ்சை சரஸ்வதி மஹால்
நூலக வெளியீடு

## பொருளடக்கம்

1. ருத்திரன் என்பவர் தீமைகளை அழிப்பவர் ........................ 13
2. ருத்திராக்ஷ மணிகள் சிவனின் கண்கள் ............................ 15
3. ருத்திராக்ஷ மரங்கள் தோன்றிய புராணக்கதை ............... 16
4. ருத்திராக்ஷ மணிகள் உருவாகக் காரணமான ஒரு சிவஸ்தலம் (திருவதிகை) ........................................ 19
5. தேவீ பாகவதப்படி ருத்திராக்ஷங்களும் அதன் நிறப்பிரிவுகளும் ...................................................................... 21
6. ருத்திராக்ஷ மணிகளின் முகங்களும் அதன் தேவதைகளும் ............................................................ 24
7. ருத்திராக்ஷங்களில் மேலும் சில முகங்கள் ........................ 32
8. ருத்திராக்ஷ மணிகளின் ஆன்மீகச் சிறப்புகள் ................ 35
9. ருத்திராக்ஷ மணிமாலை கட்டும் முறைகள் ........................ 40
10. ருத்திராக்ஷ மணிமாலைகளின் பராமரிப்பு முறைகள் ...... 42
11. ருத்திராக்ஷ மணிகளை அணியும் முறைகள் ........................ 44
12. ருத்திராக்ஷ மணிமாலை வகைகள் ........................................ 50
13. ருத்திராக்ஷ மணிகளை யார் யார் அணிந்து கொள்ளலாம்? ........................................ 54
14. ருத்திராக்ஷ மணிகளை பெண்களும் அணியலாம்........... 58
15. தெய்வங்களும் சில தேவர்களுமே ருத்திராக்ஷ மணி மாலைகள் அணிந்தது பற்றிய குறிப்புகள் ........................ 60
16. ருத்திராக்ஷ மரம் சில தாவரவியல் தகவல்கள் ................ 65
17. ருத்திராக்ஷ மணிகள் பற்றிய விஞ்ஞான விந்தைகள் ..... 68
18. ஆயுர்வேத மருத்துவத்தில் ருத்திராக்ஷ மணிகள்............ 71
19. சித்த மருத்துவத்தில் ருத்திராக்ஷ மணிகள் ........................ 74

20. அலோபதி மருத்துவத்தில் ருத்திராக்ஷ மணிகள் ............ 79

21. ருத்திராக்ஷம் பற்றிய சில தகவல்கள் ............ 81

22. ருத்திராக்ஷ மணிகள் பற்றிய சில எச்சரிக்கைகள் ............ 83

23. ருத்திராக்ஷ மணி மாலைகளால்
ஜபம் செய்யும் முறைகள் ............ 89

24. ருத்திராக்ஷ மாலை மற்றும்
ஜபமாலை பூஜை முறைகள் ............ 97

25. பலமுக ருத்திராக்ஷ மணி மாலைகளுக்கான
பூஜா மந்திரங்கள் ............ 104

26. ருத்திராக்ஷம் பற்றி பிருஹஜ்ஜாபால
உபநிஷதம் கூறும் உண்மைகள் ............ 109

27. ருத்திராக்ஷம் பற்றி ருத்திராக்ஷ ஜாபாலா உபநிஷதம்
கூறும் உண்மைகள் ............ 111

28. ருத்திராக்ஷம் பற்றி அக்ஷமாலிகோ உபநிஷதம் கூறும்
உண்மைகள் ............ 117

29. ருத்திராக்ஷம் பற்றி ஸ்காந்த புராணம்
கூறும் உண்மைகள் ............ 120

30. ருத்திராக்ஷம் பற்றி விருத்தாசலம் சிவஸ்தல புராணம்
கூறும் உண்மைகள் ............ 122

31. ருத்திராக்ஷம் பற்றி தணிகை புராணம்
கூறும் உண்மைகள் ............ 127

32. ருத்திராக்ஷ ஜபத்திற்கான சிவ பஞ்சாக்ஷர மந்திரம் ...... 130

33. ஸ்ரீ மஹாம்ருத்யுஞ்ஜய ஸ்தோத்ரம் ............ 131

34. ருத்திராக்ஷ குறிப்புகள் உள்ள
சில தேவாரப் பாடல்கள் ............ 133

35. திருமந்திரம் கூறும் ஓரெழுத்து மற்றும்
ஐந்தெழுத்தின் சிறப்புகள் ............ 141

# 1

# ருத்திரன் என்பவர் தீமைகளை அழிப்பவர்

ருத்திராக்ஷ மணிகளைப் பற்றி நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் அதற்கு முன்பு "ருத்திரனை"ப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும்.

"ருத் திராவயதி இதி ருத்ரஹ:" என்பது வாக்கியம், ருத், ரோத், ரோதம் என்றால் அது நமக்கு வரும் இன்னல்கள் கஷ்டங்களை குறிக்கும் சொல்லாகும். (அதனால்தான் கஷ்டங்களால் வரும் அழுகைக்கு "ரோதனம்" என்று பெயர் வந்தது) த்ராவயதி என்றால் அதனை விரட்டுகிற, ஆற்றல்மிக்கவன், அதனை ஓட்டுகிற சக்தி மிக்கவன் என்பது பொருள் ஆகும்.

## ஐந்துவிதமான சிவபுண்ணியங்கள்

1. *மனதில் சிவபெருமானை தியானம் செய்தல்.*
2. *உதடுகள் "திருவைந்தெழுத்து" முதலான சிவ மந்திரங்களை ஓதுதல்.*
3. *திருநீற்றை (முறைப்படி) உடல் முழுதும் பூசிக் கொள்ளுதல்.*
4. *அங்கங்களில் ருத்திராக்ஷ மணிமாலைகளை அணிதல்.*
5. *சிவனுக்குப் பிடித்தமான வில்வம் முதல் பஞ்ச வில்வங்களாலும், நந்தியாவர்த்தம் முதலான அஷ்ட புஷ்பங்களாலும் சிவபூஜை செய்தல்.*

சிவபெருமானை எல்லோரும் வெறும் "அழித்தல் கடவுளாகவே" கருதுகிறார்கள். அது மிகமிக தவறு, அவர் "சம்ஹார" கர்த்தா என்று கூறப்பட்டிருப்பதே இதற்கு காரணம்.

பஞ்சக் கிருத்தியம் என்பது இறைவனின் "ஐந்து செயல் பாடுகள்" ஆகும். "ஐந்தொழில் ஆற்றும் அமரா" என்று ஆண்டவனைப் புகழ்வார்கள் நம் ஆன்றோர்கள். இதன்படி இறைவன் புரிவது "ஐந்தொழில்கள்" ஆகும். இதனை அறிய கீழ்க்கண்ட பட்டியலை பார்க்கவும்.

| வ.எண் | இறைவனின் ஐந்து செயல்கள் | செயல் அதிகாரிகள் |
|---|---|---|
| 1. | சிருஷ்டி (படைத்தல்) | பிரம்மா |
| 2. | ஸ்திதி (காத்தல்) | விஷ்ணு |
| 3. | சம்ஹாரம் (அழித்தல்) | ருத்திரன் |
| 4. | திரோபவம் (மறைத்தல்) | ஈஸ்வரன் |
| 5. | அனுக்கிரஹம் (அருளல்) | சதாசிவன் |

இறைவன் படைத்து, காத்து பின்பு அனைத்தையும் அழித்து விட்டால், அதோடு எல்லாமே முடிந்து போகிறது. அதன்பின் பலன்களை அனுபவிக்க யாருமே இருக்கப்போவதில்லை. அப்படியென்றால் மேற்கண்ட பட்டியலில் உள்ள மற்ற இரண்டு செயல்களான "மறைத்தலும்" "அருளலும்" யாருக்காக? ஆன்மிக ஞானமுடையவர்கள் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

எனவே "சம்ஹாரம்" என்று பார்த்தாலும், அதுவும் ஒன்றை முழுதும் "அழிப்பது" "கொன்று குவிப்பது" என்ற பொருளில் வரவில்லை. "ஏனெனில் இவ்வுலகில் ஒன்றை மற்றொன்றாக மாற்ற முடியுமே தவிர அதனை முழுவதும் அழித்துவிட முடியாது!"

எனவே இங்கும் "ருத்திரனின்" அழித்தல் செயல் என்பது, உயிரினங்களுக்கு வரும் துன்பத்தை ஒழித்தல், மனித குலத்திற்கு வரும் இன்னல்களை மாய்த்தல், பக்தர்களுக்கு வரும் ஆபத்து களை அழித்தல் என்றே செயல்படுகிறது.

இப்படிப்பட்ட ஆபத் பாந்தவனான, அனாத ரக்ஷகனான, கருணை உள்ளம் மிக்க "ருத்திரன்" என்ற சிவனின் கண்களி லிருந்து வெளிப்பட்டு தோன்றியவைதான் நமது ருத்திராக்ஷ விருக்ஷங்களும், அதில் உருவான ருத்திராக்ஷ மணிகளும், எனவே நாம் அந்த சிவமணிகளின் "புனிதம்" அறிந்து போற்ற வேண்டும். அணிந்து இன்புற வேண்டும்.

# 2

# ருத்திராக்ஷ மணிகள் சிவனின் கண்கள்

"ருத்திரன்" என்பவர் சிவன். "அக்ஷம்" என்றால் கண் என்று அர்த்தம், ருத்திரன் + அக்ஷம் = "ருத்திராக்ஷம்" இதுவே தமிழில் சிவனின் கண்கள் என்றானது.

சிவனின் கண்களிலிருந்தே அவன் கண்ணீர்த் துளிகளிலிருந்தே "ருத்திராக்ஷ மரங்கள்" தோன்றின, அதனால்தான் அம்மரத்தில் தோன்றும் மணிகளுக்கும் "ருத்திராக்ஷம்" என்ற பெயர் ஏற்பட்டது. இதனை உருத்திரன் விழித்துளிகளே உருத்திராக்கம் கூறும் விருத்தாசலம் சிவஸ்தலபுராணப் பாடல் வரிகளால் உணரலாம். சரி! சிவனின் கண்களில் இருந்து ருத்திராக்ஷ மரங்களும், மணிகளும் எப்படித்தோன்றின?..



# 3

# ருத்திராக்ஷ மரங்கள் தோன்றிய புராணக்கதை

**ரு**த்திராக்ஷ மரங்கள் தோன்றியதற்கு ஒரு புராணக் கதையே உண்டு. அதனைக் கூறும் ஒரு பாடலல பார்த்துவிட்டு பிறகு அக்கதையை பார்க்கலாம்.

### கடம்பவன புராணம்

*திரிபுர ரெனும் பேரவுணராற் சிதைந்து*
*சிந்திய மான் முதற்றேவர்*
*புரிதரு தவமோ ராயிரம் வருடம்*
*புரிந்திட வியந்து போய்ப் புராரி*

---

### முக்கண்ணன் சிவன்

"சோம சூரிய அக்கினி லோசனன்" என்பது சிவபெருமானுக்குரிய சமஸ்கிருத அர்ச்சனைகளில் ஒன்று. இதற்கு சூரியன் ஒருகண், சந்திரன் ஒரு கண்; அக்கினி ஒரு கண் என்ற மூன்று கண்கள் உடைய "முக்கண்ணன்" சிவன் என்று பொருள். இந்த மூன்று கண்களில் இருந்து தோன்றியவையே ருத்திராக்ஷ மரவகைகளும் அதில் உண்டான மணிவகைகளும்.

**திருமந்திரம் (1025)**

*முக்கணன் றானே முழுசடராயவன்*
*அக்கணன் றானே அகிலமும் உண்டவன்*
*திக்கணன் திசையெட்டுங் கண்டவன்*
*எக்கணன் றானுக்கும் எந்தை பிரானே* (திருமூலர்)

மேற்கண்ட திருமூலர் திருமந்திரப்பாடலும் சிவன் முக்கண்கள் கொண்டவன் என்பதை வலியுறுத்தும்.

## திரிபுரா மாநிலம்

திரிபுரர்கள் என்ற முப்புர அசுரர்களின் நிலப்பகுதிதான் திரிபுரா மாநிலம். அதனால் தான் அந்த அரக்கர்களின் பொதுப் பெயரே அந்த மாநிலத்திற்கும் வைக்கப்பட்டது. (இதுபோலவே வேறுசில மாநிலங்களுக்கும் இப்படிப்பட்ட ஆன்மீகத் தொடர்பு உடையப் பெயர்கள் உண்டு) திரிபுரா மாநிலத்தின் அமைவிடம், வடகிழக்கில் அஸ்ஸாம் மற்றும் மிசோராம் மாநிலங்கள் மற்றும் மூன்று புரங்களிலும் வங்காள தேசத்தை எல்லைகளாகக் கொண்டுள்ளது. இங்கு பேசப்படும் மொழிகள் நான்கு. அவற்றில் திரிபுரா என்ற பெயரிலேயே ஒரு மொழியும் வழக்கத்தில் உள்ளது.

*அரிதிதென் றிரங்கிக் கண்ணிமையாது*
*பார்ப்புமுக் கண்ணினுமமைந்த*
*விரிதுளி தாழ்ந்து கண்டிகை மரமாய்*
*எழுந்தது விழுந்ததொண் புவியில்*
*அன்று தொட்டு ருத்திராக்கம் என்பர்.*

என்பது அப்பாடல் இதிலிருந்து நமக்குக் கிடைக்கும் செய்தி என்ன? திரிபுராந்தகர் என்ற "முப்புரம் எரிசெய்த முக்கண்ணனாகிய சிவன் கண்களிலிருந்தே அவன் கண்ணீர்த் துளிகளில் இருந்தே ருத்திராக்ஷ மரங்கள் தோன்றின என்பதுதான். இனிமேல் திரிபுரசம்ஹாரக் கதையினை பார்ப்போம்."

முன்னொரு காலத்தில் தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்யுன்மாலி என்ற மூன்று அசுரர்கள் இருந்தார்கள். இவர்கள் மூவருக்கும் சேர்ந்து "திரிபுர அசுரர்கள்" என்று பெயர். இவர்கள் முறையே தங்கக் கோட்டை, வெள்ளிக் கோட்டை, இரும்புக் கோட்டை என்ற மூன்று பறக்கும் தன்மை கொண்ட கோட்டைகளோடு பறந்து சென்று படையெடுத்து தேவலோகம் பூலோகம் முழுதும் பல நாடு நகரங்களை அழித்தார்கள். தேவர்களை வதைத்தார்கள். இதனை பொறுக்க முடியாத அனைவரும் ஓடிச் சென்று சிவபெருமானிடம் முறையிட, சிவனும் அவர்களை அழிக்க சித்தம் கொண்டார்.

அதற்காக அவர் தம்மை மேலும் பலப்படுத்திக் கொள்ள வேண்டியிருந்ததாலும் - யாரும் எளிதில் அடைய முடியாத ஒரு அஸ்திரத்தை பெற வேண்டியிருந்ததாலும் ஆயிரம் தேவ வருடங்கள் கண்மூடாமல் விழித்திருந்து "அகோராஸ்திரம்" என்ற ஒரு அஸ்திரத்தை தியானம் செய்தார்.

ருத்திரன் அவ்வாறு தியானம் செய்த போது தேவர்களின் துயரத்தை எண்ணி வருந்தினார். அப்போது அவருடைய சோமம், சூரியம், அக்கினி என்ற மூன்று அம்சங்கள் உடைய, மூன்று கண்களிலிருந்தும், மூன்று கண்ணீர்த் துளிகள் உருண்டு திரண்டு முத்துக்கள் போல் பூமியில் விழுந்தன. அவையே நேபாளம், இந்தோனேஷியா, ஜாவா, மலேசியா, இந்தியா போன்ற பற்பல பகுதிகளில் விதைபோலப் புதைந்து உலக மக்களின் இன்னல்களை அழிக்கும் தன்மை கொண்ட "ருத்திராக்ஷ மரங்களாக" ருத்திராக்ஷ மணிகளாகத் தோன்றின. இதன் பிறகே சிவன் திரிபுர அசுரர்களை சென்று போரிட்டு அழித்தார். அவர் அவ்வாறு திரிபுர சம்ஹாரம் புரிந்த திருத்தலம் கடலூர் பண்ருட்டி அருகே உள்ள திருவதிகை ஆகும்.



# 4

# ருத்திராக்ஷ மணிகள் உருவாகக் காரணமான ஒரு சிவஸ்தலம் (திருவதிகை)

கடலூர் மாவட்டம் பண்ருட்டி வட்டத்தில் உள்ளது "திருவதிகை" என்ற திருத்தலம், இது விழுப்புரத்திலிருந்து தென்மேற்கே 25 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. நடு நாட்டுப் பாடல் பெற்ற சிவஸ்தலங்கள் 23இல் இத்தலம் 7ஆவது இடத்தில் இருக்கிறது. மிக மிக அற்புதமானது. கலையழகுமிக்க சிற்பங்கள் உடையது இவ்வூர் கோயில்.

சிவபெருமான் எட்டுவகையான வீரச் செயல்களை புரிந்தார். அவை ஒவ்வொரு வீரச் செயலும் ஒவ்வொரு ஸ்தலத்தில் நிகழ்ந்துள்ளன. (இதன் விபரம் தனிப் பெட்டிச் செய்தியில் காண்க) அவற்றில் "திரிபுர அசுரர்களை அழித்த" திருத்தலமே இந்த "திருவதிகை". அதனால் "திருவதிகை வீரட்டம்" என்ற அடைமொழியோடே இத்தலம் விளங்குகிறது. சிவன் இந்த "திரிபுர அசுர்களை" சம்ஹாரம் செய்யும் சமயத்தில்தான் ஒரு அஸ்திரத்தை தியானித்தபோது அவன் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகளிலிருந்து "ருத்திராக்ஷ மரங்களும் அதில் மணிகளும் தோன்றின" என்பது குறிப்பிடத்தக்கது.

சமண சமயத்தில் இருந்து மேம்பட்டு "தருமசேனர்" என்று பட்டம் பெற்ற ஒரு தமிழ்ப் பெரியார். "சூலை நோயால்" வருந்தி தனது தமக்கை திலகவதியார் என்பவரிடம் சென்று சரணடைய, அவர் இத்தலத்தில் "திருவைந்தெழுத்தை" ஓதி "திருநீறு" எடுத்து பூச, தீராத அவர் சூலை நோய் தீர்ந்தது. அதனால் தருமசேனர் என்ற அந்த "சமணர்" சிவனை வணங்கும் சைவப்பெரியார் ஆனார். அவரே நமது திருநாவுக்கரசு நாயனார் என்ற அப்பர் பெருமான் ஆவார்.

**You’ve Just Finished your Free Sample**

**Enjoyed the preview?**

**Buy: https://store.prowesspub.com**